

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.12.2024) சென்னை, வால்டாக்ஸ் சாலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வடசென்னை வளர்ச்சித் திட்ட விரிவாக்கப் பணிகளின் கீழ், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகம், தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை ஆகிய துறைகளின் சார்பில் 1.383 கோடி ரூபாய் பாதிப்பீட்டிலான 79 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பெரியார் நகர் அரசு மருத்துவமனையின் பயன்பாட்டிற்காக மருத்துவ உபகரணங்கள் வழங்கி, 29 முடிவுற்றப் பணிகளை திறந்து வைத்தார். துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமனற உறுப்பினர்கள், மாநகராட்சி மேயர், துணை மேயர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.12.2024) சென்னை, வால்டாக்ஸ் சாலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வடசென்னை வளர்ச்சித் திட்ட விரிவாக்கப் பணிகளின் கீழ், 1,383 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுதல் மற்றும் திறப்பு விழாவில், வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்ட புகைப்படக் காட்சியை பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமனற உறுப்பினர்கள், மாநகராட்சி மேயர், துணை மேயர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (4.12.2024) தலைமைச் செயலகத்தில், திராவிடர் கழக பகுத்தறிவாளர் கழகத்தின் மாநில துணைத் தலைவர் முனைவர் நா. சுலோசனா சந்தித்து, தான் எழுதிய "திரைவானில் கலைஞர்" என்ற புத்தகத்தை வழங்கி, வாழ்த்து பெற்றார்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (4.12.2024) திரைப்பட நடிகர் சிவகார்த்திகேயன் சந்தித்து ஃபெஞ்சல் புயல் கனமழையைத் தொடர்ந்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு மேற்கொண்டு வரும் மீட்பு மற்றும் நிவாரண பணிகளுக்கு துணை நிற்கும் வகையில் "முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு" 10 லட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்.



முதலமைச்சர் அவர்கள் பெஞ்சல் புயல் கனமழை காரணமாக திருவண்ணாமலை மலையடிவாரத்தில் உள்ள வ.உ.சி நகரில் மண் சரிவு ஏற்பட்டு உயிரிழந்த ஏழு நபர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ. 5 இலட்சத்திற்கான நிவாரண தொகையினை வழங்குவதற்கு ஆணை பிறப்பித்ததை தொடர்ந்து, பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள்துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று (05.12.2024) திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் உயிரிழந்தவர்களின் வாரிசுதாரர்களிடம் ரூபாய் 5 லட்சம் நிவாரணத் தொகை பெறுவதற்கான ஆணையினை வழங்கினார்கள். இந்நிகழ்வில் சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், திருவண்ணாமலை மாநகராட்சி மேயர் திருமதி நிர்மலா வேல்மாறன், மாநில தடகளச் சங்கத் துணைத்தலைவர் மரு. எ.வ.வே. கம்பன், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு துறைச்சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

## மும்பை கலைஞர் தமிழ்ச் சங்கம் சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா- கருத்தரங்கம்!

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் – மு.தென்னவன் சிறப்புரை! ம.சேசுராசு தலைமை!

மும்மை, டிச. 6-

மும்பை கலைஞர் தமிழ்ச் சங்கம் சார்பில் 8.12.2024 ஞாயிறு மாலை 5 மணிக்கு பாண்டுப் மேற்கு பகுதியில் அமைந்துள்ள பிரைட் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் கல்வித்தந்தை தேவதாசன் அரங்கத்தில் விழா நடைபெறுகிறது.

வடமொழியை தாய் மொழியாகக் கொண்ட மாணவச் செல்வங்களால் தமிழ்த்தாய் வாழ்த்துடன் கலைஞர் நூற்றாண்டு நிறைவுவிழா துவங்குகிறது.

தொடர்ந்து தலைவர்களின் படங்களை திறந்து வைத்து மரியாதை செலுத்தப்படவிருக்கிறது.

"காலத்தை வென்ற தலைவர் என்கிற பொதுத்தலைப்பில் கட்டுரை

எந்த பிரதிபலனும் எதிர்பாராமல் பல தடைகளை தாண்டி இன்றுவரை மும்பை கழகத்திற்காக இழைத்துக் கொண்டிருக்கும் மூத்த உறுப்பினர்களை பாராட்டி மரியாதை செய்தல் அரசியல் மற்றும் சாதி சமயத்திற்கு அப்பாற்பட்டு தொண்டாற்றும் சமூக ஆர்வலர்களுக்கு சிறப்பு செய்தல்

500 பேர்க்கு மேல் இலவச உதவிகள் வழங்குதல்.,

கலைஞர் படம் பொறித்த சுவர்க்கடிகாரங்கள்,

2025 க்கான நூற்றாண்டு நிறைவு விழா தினசரி நாள் காட்டி வழங்குதல்

கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா சிறப்பு மலர் வெளியிடப்படும்.

கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவின் நாயகர்,முத்தமிழ் அறிஞர் முத்துவேல் கலைஞர் அவர்களின் படத்தை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பனும், சமீபத்தில் மறைந்த முரசொலி செல்வம் அவர்களின் படத்தை முன்னாள் அமைச்சர் மு.தென்னவனும், தந்தை பெரியார் அவர்களின் படத்தை திருமதி சுகுணா அன்பழகனும், பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் படத்தை திருமதி ஜஸ்டினா ஜேம்ஸ்சும், பேராசிரியர் படத்தை திருமதி விண்ணரசி சேசுராசுவும், மும்பையில் கழகம் வளர்த்த தளகர்த்தர்களாம் மறைந்த தலைவர்கள் எஸ்.தியாகராசன் அவர்களின் படத்தை திருமதி ஜெலின் ஜேக்கப்பும், த.மு.ஆரியசங்காரன் அவர்களின் படத்தை திருமதி லட்சுமி மாணிக்கமும், த.மு.பொற்கோ அவர்களின் படத்தை திருமதி. நங்கை குமணராசனும், கல்வித்தந்தை வி.தேவதாசன் அவர்கள் படத்தை திருமதி ஜானகி மாறனும் திறந்து வைத்து மரியாதை செய்கிறார்கள்.

அதன்பிறகு "காலத்தை வென்ற கலைஞர்" என்கிற பொதுத் தலைப்பில் நடைபெறவிருக்கின்ற கருத்தரங்கத்தை காரைக்குடி கலைஞர் தமிழ்ச் சங்க நிறுவனர் முன்னாள் அமைச்சர் மு. தென்னவன் தலைமையேற்று நடத்தித்தர இருக்கின்றார்கள்.

மும்பை கலைஞர் தமிழ்ச் சங்க புரவலர் பொ. அன்பழகன் தொடங்கி வைக்கிறார்கள்.

"சமூக நீதியின் சமத்துவக் காவலர்" என்கிற தலைப்பில் தி.மு.க. தலைமைக்கழகப் பேச்சாளர், நாகை மாவட்ட தி.மு.க. துணைச் செயலாளர் ஆரூர் மணி வண்ணன் அவர்களும்,

"சரித்திரம் போற்றும் சாதனை நாயகர்" என்கிற தலைப்பில் மும்பைச் சாரல் இதழின் ஆசிரியர் திருமதி ஜெயதுர்கா ராஜன் அவர்களும்,

"இணையில்லா இலக்கிய வேந்தர்" என்கிற தலைப்பில் ஞானசேகரன் கல்வி அறக்கட்டளை தென்பாதி சீர்காழி சீ.இராசேந்திரன் அவர்களும்,

"மானமுள்ள சுயமரியாதைக்காரர்" என்கிற தலைப்பில் மும்பை எழுத்தாளர் கவிஞர் புதியமாதவி அவர்களும் தலைவர் கலைஞர் அவர்களுக்கு புகழுரை நிகழ்த்துகிறார்கள்.

அதன்பிறகு நடைபெறும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா நிகழ்விற்கு கலைஞர் தமிழ்ச் சங்கச் செயலாளர் ஜேம்ஸ்தேவதாசன் அவர்கள் வரவேற்பு உரை நிகழ்த்துகிறார்கள்.

மும்பை கலைஞர் தமிழ்ச் சங்க நிறுவனர்/ தலைவர் முன்னாள் தி.மு.க. இளைஞரணி அமைப்பாளர் ம.சேசுராசு அவர்கள் விழாவிற்கு தலைமை வகிக்க இருக்கின்றார்கள்.

இலவச நல உதவிகள் வழங்கி கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா சிறப்பு மலரை வெளியிட்டு விழா நிறைவுப் பேருரை தமிழ்நாடு கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வழங்க இருக்கிறார்கள். நூற்றாண்டு விழா மலரின் முதல் பிரதியை மும்பை பிரதேச காங்கிரஸ் கட்சியின் தலைவரும், மஹாராஷ்டிர மாநில முன்னாள் அமைச்சருமான திருமதி வர்ஷா தாய் கெய்க்வாட் எம்.பி. அவர்கள் பெற்றுக் கொள்கிறார்கள்.

சிறப்பு அழைப்பாளர்களாக சஞ்சய் தீனா பாட்டில் எம்.பி. அவர்களும், மும்பை பிரதேச காங்கிரஸ் கட்சி துணைத்தலைவர் கணேஸ் குமார் யாதவ் அவர்களும் , நவிமும்பை கல்விக்கழக முன்னாள் தலைவர் ரவிஜயர் அவர்களும்,மும்பை பிரதேஸ் காங்கிரஸ் எஸ்.சி பிரிவு தலைவர் முன்னாள் கவுன்சிலர் கச்சுரு யாதவ் அவர்களும், பயங்கரவாத தடுப்பு அமைப்பின் தலைவர் எஸ்.பி.அகுசா அவர்களும் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொள்கிறார்கள். கழகத்தின் மூத்த தலைவரும், கலைஞர் தமிழ்ச் சங்க பொருளாளருமான க.மு.மாணிக்கம், தலைமை பொதுக்குழு உறுப்பினர் அமல்ராஜ் மைக்கேல், இலக்கிய அணி செயலாளர் ஜான்சாமுவேல், கலைஞர் தமிழ்ச் சங்க நிர்வாகக்குழு உறுப்பினர்கள் ம.நீதித்துரை, இரா.மதியழகன், பேலஸ்துரை ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள். தமிழ் இலெமுரியா அறக்கட்டளை நிறுவனர் சு.குமணராசன், கம்பன் பள்ளி நிறுவனர் அருட்தந்தை எம்.ஏ. சூசை, மும்பை திராவிடர் கழக தலைவர் பெ. கணேசன், மும்பை தி.மு.க. துணைச் செயலாளர் டி.எம். மைதீன், மும்பை தென்னிந்திய ஆதிதிராவிட மகாஜன சங்கத்தின் முன்னாள் தலைவர் கே.வி.அசோக்குமார், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாநகர அமைப்பாளர் எஸ்.சாலமோன் ராஜா, மும்பை பகுத்தறிவாளர் கழக தலைவர் அ.ரவிச்சந்திரன்,

மும்பை ஆதிதிராவிட மகாஜன சங்க செயலாளர் மாறன் நாயகம், தலைவர் எஸ்.பி.ஆனந்த், காரை கரு. ரவீந்திரன், ஆ.பாலசுப்பிரமணியன், காமராஜர் பள்ளி தலைவர் எம்.எஸ்.காசிலிங்கம், செயலாளர் வி.மைக்கேல்,

துணைத்தலைவர் மகேந்திர் ராமராஜா, முன்னாள் மும்பை மாநகர்மன்ற கவுன்சிலர் மாரியம்மாள் முத்துராமலிங்கம்,

சிவசேனா சாக்க பிரமுக் முத்து பட்டன் சிவசேனா கட்சியைச் சார்ந்த எஸ். அண்ணாமலை,

ஜெபியார் ரேடியோஸ் பாக்கியநாதன், காங்கிரஸ் கட்சியை சார்ந்த நடராஜன், அருணாச்சலம், கோபாலகிருஷ்ணன், ஜெரிமெரி தமிழ்ச்சங்கத் தலைவர் இல.முருகன்,தமிழ் ஓட்டுனர்கள் சங்கத் தலைவர் இரா.ரவிரஜினி, தானே மாவட்ட ஜாகீர் உசேன், யாதவர் மகாசபை லெக்சுமணன் தேவேந்திர குல வேளாளர் சங்கத்தலைவர் மாஸ்டர் பூமிநாதன் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டு விழாவை சிறப்பிக்க இருக்கின்றார்கள்.

சகோதரி கவியரசி சேசுராசு அவர்கள் விழா நிகழ்ச்சி நிரல்களை தொகுத்து வழங்குகிறார்கள்.

நிறைவாக கலைஞர் தமிழ்ச் சங்க நிர்வாகக் குழு உறுப்பினர் மாறன் ஆரிய சங்காரன் நன்றி நவில விழா இனிதே நிறைவடைகிறது.

விழா ஏற்பாடுகளை தலைவர் ம.ஜேசுராஜ் தலைமையில், செயலாளர் ஜேம்ஸ் தேவதாசன், பொருளாளர் க.மு.மாணிக்கம், புரவலர் பொ.அன்பழகன் மற்றும் கலைஞர் தமிழ்ச் சங்கம் நிர்வாகிகள் சிறப்பாகச் செய்து வருகிறார்கள்.

## அதானி ஊழல் குறித்து விசாரணை நடத்த வேண்டும்!

# நாடாளுமன்றத்தில் அதானி விவகாரம் குறித்து விவாதிக்க வேண்டும்!

### நாடாளுமன்ற வளாகத்தில் இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் ஆர்ப்பாட்டம்!

புதுடெல்லி, டிச. 6-

அதானி ஊழல் குறித்து விசாரணை நடத்த வலியுறுத்தி நாடாளுமன்ற வளாகத்தில் இந்தியா கூட்டணி கட்சி எம்.பி.க்கள் 3வது நாளாக நேற்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வெளிநாடுகளில் ஒப்பந்தங்களை பெற அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்த விவகாரத்தில் கவுதம் அதானிக்கு எதிராக அமெரிக்க நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், உலகளவில் இந்தியாவின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்திய அதானி மீதான புகார் குறித்து உரிய விசாரணை நடத்தி கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், நாடாளுமன்ற இரு அவைகளிலும் இதுகுறித்து விவாதிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி இந்தியா கூட்டணி கட்சி எம்.பி.,க்கள் நாடாளுமன்ற வளாகத்தில் 3வது நாளாக நேற்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி, பிரியங்கா காந்தி எம்.பி., மக்களவை தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, மாநிலங்களவை தி.மு.க. குழுத் தலைவர் திருச்சி சிவா உள்ளிட்ட இந்தியா கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்த எம்.பி.க்கள் கலந்து கொண்டனர்.

மோடி மற்றும் அதானிக்கு எதிரான வாசகங்கள் அடங்கிய ஆடையை அணிந்து அவர்கள் பங்கேற்றனர். இந்த விவகாரத்தில் செவிமடுக்காமல் இருக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் காதுகளில் ஒலிக்கும் வகையில் கைகளை தட்டி முழக்கங்களை எழுப்பினர்.

அப்போது, அதானி விவகாரத்தில் பிரதமர் மோடி மவுனம் காப்பது ஏன் என்று வினவினர். அதானி மீதான விசாரணை, தம் மீதான விசாரணை என மோடி நினைப்பதால்தான், அதற்கு இதுவரை அனுமதியளிக்கப்படவில்லை என்று கண்டனம் தெரிவித்தனர். அதானி ஊழல் குறித்து நாடாளுமன்ற கூட்டுக் குழு விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என வலியுறுத்தி பேரணியாகச் சென்று முழக்கங்களை எழுப்பினர்.

**அதானி மீதான விசாரணை மோடி மீதான விசாரணைக்கு சமம்**

மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

ஆர்ப்பாட்டத்தின் போது செய்தியாளர்களிடம் பேசிய ராகுல்காந்தி, மோடியும், அதானியும் ஒன்றுதான் என தெரிவித்தார். அதானி மீது நடத்தப்படும் விசாரணை என்பது, மோடி மீது நடத்தப்படும் விசாரணை என்பதற்கு சமம் என்று தெரிவித்த அவர், அதனால்தான் மோடி அச்சப்படுவதாக சாடினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வீரா (எ) வி.வீரமணி
### டிசம்பர் 6 (2020)



**கழகக் குடும்பத்தைச் சேர்ந்த இவர், தனது இளமைப் பருவத்திலேயே கழகத்தில் இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.**

**வடசென்னை மாவட்டத்தில், பகுதிப் பிரதிநிதியாகவும், வட்டக் கழகச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**